# பட்டாசுக்கு விதிக்கப்பட்ட தடையை மறுபரிசீலனை செய்யுங்கள்

# ராஜஸ்தான், ஒடிசா முதல்வர்களுக்கு எடப்பாடி கடிதம்



**சென்னை, நவ.6–**

**பட்டாசுக்கு ராஜஸ்தான், ஒடிசாவில் விதிக்கப்பட்ட தடை உத்தரவினால் தமிழகத்தில் 16 லட்சம் பட்டாசு தொழிலாளர்ளுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் அந்த உத்தரவை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று அம்மாநில முதல் அமைச்சர்களுக்கு தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கடிதம் எழுதியுள்ளார்.**

இதுகுறித்து ஒடிசா முதல் அமைச்சர் நவீன் பட்நாயக் மற்றும் ராஜஸ்தான் முதல் அமைச்சர் அசோக் கெலாட் ஆகியோருக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி எழுதிய கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:–

நமது நாட்டு கலாசார வழக்கத்தின்படி தீபாவளி பண்டிகையையொட்டி இந்தியா முழுவதும் பட்டாசு வெடித்து கொண்டாடுவது வழக்கம். பட்டாசு வெடிப்பது தொடர்பாக சுப்ரீம் கோர்ட் 2018–ம் ஆண்டு அக்டோபர் 23–ந் தேதியன்று தீர்ப்பு ஒன்றை வெளியிட்டது.

தீபாவளியை கொண்டாடும் கலாசாரத்தை பாதுகாக்கும் வகையிலும், பட்டாசு தொழிலில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபடும் வேலைவாய்ப்புகளை கருத்தில் கொண்டும் அனைத்து மாநிலங்களுக்கும் உத்தரவை சுப்ரீம் கோர்ட் பிறப்பித்திருந்தது.

அதில், தீபாவளி தினத்தன்று பொதுஇடங்களில் 2 மணிநேரம் பட்டாசுகளை வெடிக்கலாம் என்று கூறப்பட்டு இருந்தது. சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவுப்படி, பசுமை பட்டாசுகளை காலையில் 1 மணி நேரமும், மாலையில் 1 மணி நேரமும் வெடிக்க தமிழகத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகம், மிகப்பெரிய அளவில் பட்டாசு உற்பத்தியை கொண்ட மாநிலமாகும். குறைந்த அளவில் புகை மற்றும் சத்தத்தை வெளியிடும் மூலப் பொருட்களை கொண்டு பட்டாசு உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மொத்த பட்டாசுகளில் 90 சதவீதத்தை தமிழகம் பங்களிக்கிறது.

### 8 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு

பட்டாசு உற்பத்தி தொழில், 4 லட்சம் மக்களுக்கு நேரடியாகவும், 4 லட்சம் மக்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு அளிக்கிறது. தீபாவளி பண்டிகையின்போது நடக்கும் பட்டாசு விற்பனையில்தான் அவர்களின் வாழ்வாதாரம் அமைந்துள்ளது.

இந்த சூழ்நிலையில் உங்கள் மாநிலத்தில் பட்டாசு வெடிப்பதை தடை செய்திருப்பது, 8 லட்சம் பட்டாசு தொழிலாளர்கள் மற்றும் அதே எண்ணிக்கையில் உள்ள பட்டாசு விற்பனையாளர்களின் வாழ்வாதாரத்தை நேரடியாக பாதிக்கும்.

கொரோனா பரவலை முன்னிட்டு உங்கள்மாநிலத்தில்பட்டாசுவிற்பனை மற்றும் வெடிப்பதை சமீபத்தில் தடை செய்து உத்தரவிட்டுள்ளதாக தெரிகிறது. தமிழகம் பெரும்பாலும் பசுமை பட்டாசுகளைத்தான் உற்பத்தி செய்கிறது. எனவே சுற்றுச்சூழல் மாசு பற்றிய கேள்வி எழாது.

மேலும் கொரோனா நோயாளிகளுக்கு பட்டாசு வெடிப்பதன் மூலம் பாதிப்பு ஏற்படும் என்பதற்கு, அங்கீகரிக்கப்பட்ட ஆதாரமான புள்ளிவிவரங்கள் எதுவும் இல்லை. எனவே தீபாவளி பண்டிகையின்போது பட்டாசுகளை தடை செய்ய வேண்டும் என்ற உங்களின் முடிவை மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் முன்கூட்டியே தீபாவளி வாழ்த்துகளை கூறிக்கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.



# சென்னை எழும்பூர் குழந்தைகள் அரசு நல மருத்துவமனையில்

# ரூ.4 கோடியில் அதி நவீன சி.டி. ஸ்கேன் கருவி: அமைச்சர் விஜயபாஸ்கர் துவக்கினார்

**சென்னை, நவ.6–**

**சென்னை எழும்பூர் குழந்தைகள் அரசு நல மருத்துவமனையில் ரூ.4 கோடி மதிப்பில் புதிதாக நிறுவப்பட்டுள்ள நவீன 128 கூறு சி.டி. ஸ்கேன் கருவியை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் தொடங்கி வைத்தார். இந்த கருவியை பொதுமக்களின் பயன்பாட்டுக்காக தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி குழந்தைகள் அரசு நல மருத்துவமனையில் நேற்று நடைபெற்றது.**

இந்த நிகழ்ச்சிக்கு சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் தலைமை ஏற்று, சி.டி. ஸ்கேன் கருவி பயன்பாட்டை தொடங்கி வைத்தார். அதன் பின்னர் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் நிருபர்களிடம் கூறியதாவது:–

தமிழக மருத்துவமனையில் அதிநவீன கருவிகள் தொடர்ந்து நிறுவப்பட்டு வருகிறது. அந்த வகையில் கடந்த ஆண்டு மட்டும் 55 சி.டி.ஸ்கேன் கருவிகள் நிறுவப்பட்டுள்ளது. தமிழக மருத்துவமனையில் இதுவரை 115 சி.டி. ஸ்கேன் எந்திரம் செயல்பட்டு வருகிறது. எழும்பூர் அரசு குழந்தைகள் மருத்துவமனையில் இதுவரை கொரோனா நோய் தொற்றால் பாதிக்கப்பட்ட 1,100 குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இது பாராட்டத்தக்கது. தமிழகம் முழுவதும் 64 ஆயிரத்து 193 குழந்தைகள் இதுவரை கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கொரோனா தொற்றை கட்டுப்படுத்த தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கடைகளில் விற்பனையாளர் மற்றும் வாடிக்கையாளர் அனைவரும் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். பண்டிகை காலங்களில் முதியவர்கள், குழந்தைகள், சிறுவர்களை கடைகளுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும். இளைஞர்கள் முகக்கவசம் அணிந்து கடைகளுக்கு செல்லலாம். இதன் மூலம் தொற்று பரவுவதை தடுக்க முடியும்.

இ–சஞ்சீவினி இணையதளத்தில் 2 லட்சத்துக்கும் அதிகமானோர் பயன் பெற்றுள்ளனர். இ–சஞ்சீவினி பயன்பாட்டில் தொடர்ந்து தமிழகம் முதல் இடம் வகித்து வருகிறது. கொரோனா பிந்தைய தொடர் கண்காணிப்பு மையம் தமிழகத்தில் தான் முதல் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டு, அங்கு குணமடைந்த நோயாளிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். தமிழகத்தின் அனைத்து அரசு மருத்துவமனையிலும் கொரோனா பிந்தைய தொடர் கண்காணிப்பு மையம் அமைக்கப்படும்.

தமிழகத்தில் கொரோனா தொற்று நோய் தடுப்பு பணிகளுடன், மற்ற தொற்று நோய் தடுப்பு பணிகளையும் களப்பணியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். தமிழகத்தில் கடந்த ஆண்டு (2019) அக்டோபர், நவம்பர், டிசம்பரை ஒப்பிடுகையில் இந்த ஆண்டு 15 மடங்கு டெங்கு பாதிப்பு குறைவாக உள்ளது. இந்த நிலையை தக்க வைக்க பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்வின்போது சுகாதாரத்துறை செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், மருத்துவ கல்வி இயக்குனர் டாக்டர் நாராயணபாபு, ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை 'டீன்' தேரணிராஜன், எழும்பூர் குழந்தைகள் அரசு மருத்துவமனை இயக்குனர் எழிலரசி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை மாவட்டம் புரசைவாக்கத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் டி.ஜெயக்குமார் வழங்கினார். மாவட்ட கலெக்டர் ஆர்.சீத்தாலட்சுமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# 'டாஸ்மாக்' ஊழியர்களுக்கு 10% போனஸ் அறிவிப்பு

**சென்னை, நவ.6–**

**டாஸ்மாக் ஊழியர்களுக்கு 10 சதவீத போனஸ் வழங்கப்படும் என்றுதமிழக அரசு அறிவித்துள்ளது.**

இதுகுறித்து தமிழக நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன் வெளியிட்ட அரசாணையில் கூறப்பட்டிருப்பதாவது:–

தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் 'சி' மற்றும் 'டி' பிரிவு ஊழியர்களுக்கு 2019–20–ம் ஆண்டுக்கான போனஸ் மற்றும் கருணைத் தொகையை 2020–21ம் ஆண்டு வழங்குவதற்கான உத்தரவை அரசு பிறப்பித்துள்ளது.

திருத்தப்பட்ட போனஸ் சட்டம் 2015–ன்படி, போனஸ் பெற தகுதியான சம்பள உச்சவரம்பு ரூ.21 ஆயிரம் என்று உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி போனஸ் கணக்கிட இருந்த மாதாந்திர சம்பள உச்சவரம்பும் ரூ.7 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதன்படி 2019–20ம் ஆண்டில் அனைத்து அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் சி மற்றும் டி பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 8.33 சதவீதம் போனஸ் மற்றும் 1.67 சதவீதம் கருணைத் தொகை என மொத்தம் 10 சதவீதம் வரை போனஸ் மற்றும் கருணைத்தொகை வழங்கப்படும்.

அதுபோல டாஸ்மாக் நிறுவனம் மூலம் தேர்வு செய்யப்பட்ட நிரந்தர ஊழியர்கள் மற்றும் வேறு வாரியம், கழகம் அல்லது அரசுத்துறையில் இருந்து மாற்றுப்பணியில் நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்கும் 10 சதவீத போனஸ் தொகையை வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

போனஸ் வழங்குவதற்கான ஊழியர்களை தேர்வு செய்யும்போது, அவர்கள் வேலையில் சேர்ந்த தேதி கணக்கில் எடுக்கப்பட வேண்டும். முறைகேடுகள் தொடர்பாக பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள், பயிற்சியில் இருப்பவர்களுக்கு போனஸ் கிடையாது.

2019–20–ம் ஆண்டில் 30 நாட்களுக்கு மேலாக பணியாற்றியவர்களுக்கு ரூ.100 போனஸ் தொகையாக வழங்கலாம். கண்காணிப்பாளர், விற்பனையாளர், உதவி விற்பனையாளர்களுக்கு அதிகபட்சம் ரூ.8,400 போனஸ் தொகை வழங்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


**துல்சியான் என்இசி லிட்.**

**பதிவு அலுவலகம் :** முதல் தளம், அபெக்ஸ் பிளாசா, பழைய எண்.3, புதிய எண்.77, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600 034. போன் : 044 - 61991060.
**ஃபேக்ஸ் :** 044 - 61991066. **இமெயில் :** investor@tulsyannec.in
**இனையதளம் :** www.tulsyannec.in **CIN No. :** L28920TN1947PLC007437

**அறிவிப்பு**

30 செப்டம்பர், 2020-ல் நிறைவடைந்த இரண்டாவது காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான நிறுவனத்தின் தணிக்கையாகாத தனித்துள்ள மற்றும் தொகுக்கப்பட்ட நிதிநிலை முடிவுகளை பரிசீலனை செய்து ஒப்புதல் அளிப்பதற்காக இதர அலுவல்களுக்கிடையே இயக்குநர்கள் குழு கூட்டமானது 13 நவம்பர் 2020, வெள்ளிக்கிழமை, காலை 10.30 மணிக்கு விடியோ கான்பரன்சிங் (VC) அல்லது பிற கேட்பொலி காட்சி (OAVM) மூலமாக நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு மேலும் நிறுவனத்தின் இணையதளமான **www.tulsyannec.in**-லும் அத்துடன் நிறுவனப் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்குச்சந்தையின் இணையதளமான **www.bseindia.com** (BSE லிமிடெட்)-லும் கிடைக்கப்பெறும்.

**துல்சியான் என்இசி லிமிடெட்காக**
ஒம்/–
**பார்வதி சோனி**
நிறுவன செயலாளர்

இடம் : சென்னை
தேதி : 06.11.2020



**OMNI AXS SOFTWARE LIMITED**

Regd. Office: New No.32, Old No.106, 1st Floor, Dr. Ranga Road, Mylapore, Chennai 600 004 – Ph; 6379803477
Email: omniax2015@gmail.com, CIN:L30006TN1992PLC022439

**NOTICE**

Notice is hereby given that pursuant to Regulation 47 read with Regulation 33 SEBI(LODR) Regulations, 2015 a meeting of Board of Directors of the Company is scheduled to be held on Friday, November 13, 2020 at 05.30 P.M., at the Registered office at New No.32, Old No. 106, 1st Floor, Dr. Ranga Road, Mylapore, Chennai 600 004, inter-alia to discuss and approve Unaudited Financial Results (Standalone) for the quarter and half year ended September 30, 2020.

Further, in terms of the Code of Conduct of Company adopted under SEBI (Prohibition of Insider Trading) Regulations, 2015 the trading window for dealing in the securities of the Company is already closed and shall open 48 hours after conclusion of the Board Meeting.

For and on behalf of OMNI AXS SOFTWARE LTD
Place: Chennai Sd/-
Date: 06/11/2020 Company Secretary & Compliance Officer



**பொது அறிவிப்பு**

**யூஆர்சி-2 படிவம்**

XXI ஆம் அத்தியாயத்தின் பகுதி I இன் கீழ் பதிவு செய்தல் பற்றிய அறிவித்தல் விளம்பரம் [2013 ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டம் மற்றும் 2013 ஆம் ஆண்டின் (பதிவுசெய்ய அங்கீகரிக்கப்பட்ட) விதிகள் 2014 இன் விதி 4(1) இன் 374(ஆ) பிரிவின் படி]

1. இந்த அறிவிப்பின் படி நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 366 இன் துணைப்பிரிவு (2) ஐப் பின்பற்றி, 2020 நவம்பர் 22 ஆம் தேதி அல்லது அதற்கு முன்னர் கிரவுன் டெக்னாலஜிஸ் என்கிற கூட்டு நிறுவனம், நிறுவனங்கள் சட்டம் 2013 இன் அத்தியாயம் XXI இன் பகுதி I இன் கீழ் பங்குதாரர்களால் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்ய, சென்னை நிறுவன பதிவாளருக்கு ஒரு விண்ணப்பம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.
2. நிறுவனத்தின் முக்கியசெயல்பாடுகள் பின் வருமாறு: தூள் பூச்சு மற்றும் உலோக, தானியங்கி, பொறியியல் மற்றும் மின்னணு பாகங்கள் எலக்ட்ரோ வைப்பு மேற்பரப்பு பூச்சு.
3. உத்தேச நிறுவனத்தின் வரைவு நினைவுக்குறிப்பு மற்றும் கட்டுரைகளின் நகலை, எண்.468, ஸ்ரீகாமாட்சி அம்மன்நகர், இருக்காட்டுக்கோட்டை கிராமம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு 602 117, என்ற அலுவலகத்தில் ஆய்வு செய்யலாம்.
4. இந்த விண்ணப்பத்தை எதிர்க்கும் எந்தவொரு நபரும் தங்கள் ஆட்சேபனைகளை மத்திய பதிவு மையம் (சி.ஆர்.சி), இந்திய கார்ப்பரேட் விவகாரங்கள் நிறுவனம் (ஐ.ஐ.சி.ஏ), சதி எண் 6,7,8, பிரிவு 5 , ஐ.எம்.டி மானேசர், மாவட்ட குர்கான் (ஹரியானா) 122050, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து இருபத்தி ஒரு நாட்களுக்குள் எழுத்து மூலம் தெரிவிக்கலாம். அதன் நகலை நிறுவனம்பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**கிரவுன் டெக்னாலஜிஸ்**
**சண்முகம் வீரராகவன்**
**இதயசந்திரன் சரோஜினி**

**தேதி: 06 மாதம்: 11 வருடம்: 2020**



K SUGAR C AND P IND COR

**கே.சி.பி. சுகர் & இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**

பதிவு அலுவலகம் : "இராமகிருஷ்ணா பில்டிங்ஸ்", எண்.239, அண்ணாசாலை, சென்னை–600 006.

**CIN:L15421TN1995PLC033198**

✆: 044 - 28555171-176 | 🖷: 044 - 28546617 | ✉: investorservices@kcpsugar.com | 🌐: www.kcpsugar.com


**EXTRACT OF THE STANDALONE AND CONSOLIDATED UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND HALF YEAR ENDED 30.09.2020 PURSUANT TO REGULATION 47 OF SEBI (LODR) REGULATIONS, 2015**

(ரூபாய் லட்சத்தில்)

| வ. எண். | விவரங்கள் | தனி தன் நிதிநிலை முடிவு | | | | | | கூட்டு நிதிநிலை முடிவு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முடிவடைந்த காலாண்டு | | | முடிவடைந்த அரையாண்டு | | முடிவடைந்த ஆண்டு | முடிவடைந்த காலாண்டு | | | முடிவடைந்த அரையாண்டு | | முடிவடைந்த ஆண்டு |
| | | 30.09.2020 | 30.06.2020 | 30.09.2019 | 30.09.2020 | 30.09.2019 | 31.03.2020 | 30.09.2020 | 30.06.2020 | 30.09.2019 | 30.09.2020 | 30.09.2019 | 31.03.2020 |
| | | தணிக்கை செய்யப்படாத | தணிக்கை செய்யப்படாத | தணிக்கை செய்யப்படாத | தணிக்கை செய்யப்படாத | தணிக்கை செய்யப்படாத | தணிக்கை செய்யப்பட்ட | தணிக்கை செய்யப்படாத | தணிக்கை செய்யப்படாத | தணிக்கை செய்யப்படாத | தணிக்கை செய்யப்படாத | தணிக்கை செய்யப்படாத | தணிக்கை செய்யப்பட்ட |
| 1 | செயல்பாட்டின் மூலம் மொத்த வருமானம் | 7322.61 | 8206.65 | 8915.54 | 15529.26 | 18029.04 | 36577.37 | 7977.65 | 8572.42 | 10199.42 | 16550.07 | 20208.57 | 40647.54 |
| 2 | வரிக்கு முன் ஆனால் விதிவிலக்கான & அசாதாரன உருப்படிகளுக்கு பின் நிகர லாபம்/நஷ்டம் | (569.85) | 853.34 | 66.17 | 283.49 | 466.99 | (1728.90) | (506.23) | 880.99 | 304.65 | 374.76 | 997.00 | (1075.41) |
| 3 | வரிக்கு முன் ஆனால் விதிவிலக்கான & அசாதாரன உருப்படிகளுக்கு பின் உள்ள நிகர லாபம்/நஷ்டம் | (569.85) | 853.34 | 66.17 | 283.49 | 466.99 | (1728.90) | (506.23) | 880.99 | 304.65 | 374.76 | 997.00 | (1075.41) |
| 4 | வரி மற்றும் விதிவிலக்கான & அசாதாரன உருப்படிகளுக்கு பின் உள்ள நிகர லாபம்/நஷ்டம் | (514.06) | 945.19 | 403.25 | 431.13 | 514.54 | (1115.07) | (466.71) | 965.74 | 576.08 | 499.03 | 897.61 | (626.09) |
| 5 | மற்ற விரிவான வருமானம் | -- | -- | -- | -- | -- | 16.29 | (7.04) | 38.56 | 18.78 | 31.52 | 13.61 | (24.95) |
| 6 | மொத்த விரிவான வருமானம் [உள்ளடங்கியது காலத்திற்கான லாபம்/ நஷ்டம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)] | (514.06) | 945.19 | 403.25 | 431.13 | 514.54 | (1098.78) | (473.75) | 1004.30 | 594.86 | 530.55 | 911.22 | (651.04) |
| 7 | மொத்த பங்குத் தொகை (ஒரு பங்கிற்கு முக மதிப்பு ரூ.1) | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 |
| 8 | ஒரு பங்கின் ஈட்டுத்தொகை (ஒரு பங்கின் முக மதிப்பு ரூ.1) | | | | | | | | | | | | |
| | – அடிப்படை | (0.45) | 0.83 | 0.36 | 0.38 | 0.45 | (0.97) | (0.42) | 0.89 | 0.51 | 0.47 | 0.80 | (0.57) |
| | – நீர்த்த | (0.45) | 0.83 | 0.36 | 0.38 | 0.45 | (0.97) | (0.42) | 0.89 | 0.51 | 0.47 | 0.80 | (0.57) |

**குறிப்புகள் :**

1. 30.09.2020 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டின் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள், (Companies Indian Accounting Standards) விதிகள், 2015 மற்றும் இந்திய நிறுவனச் சட்டம், 2013 பிரிவு 133 மற்றும் பரிந்துரைக்கப்பட்ட கணக்கியல் தரம் நடைமுறைப்படியும் கணக்கிடப்பட்டது.
2. சர்க்கரைத் தொழில் ஒரு பருவகால தொழில் மற்றும் முக்கியமாக சுழற்சியின் தன்மை கொண்டதாக இருப்பதால், மேற்கூறிய முடிவுகளை நிறுவனத்தின் ஒட்டுமொத்த வருடாந்திர செயல்பாடுகளாகவோ மற்றும் நிறுவனத்தின் லாப குறிகாட்டியாகவோ அல்லது காலாண்டுகளுக்கு இடையிலான கூட்டு ஒப்பீடாகவோ கருத முடியாது.
3. சட்டப்பூர்வமான தணிக்கையாளர்கள் மூலம் மேற்கண்ட தணிக்கை செய்யப்படாத தனித்த மற்றும் கூட்டு நிதிநிலை முடிவுகள் வரையறுக்கப்பட்ட தணிக்கை செய்யப்பட்டு, அவர்களது அறிக்கை 04.11.2020 அன்று நடைபெற்ற இயக்குநர் குழுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
4. மேற்கண்ட தணிக்கை செய்யப்படாத தனித்த மற்றும் கூட்டு நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு 04.11.2020 அன்று நடந்த இயக்குநர் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது.
5. இந்த நாளிதழ் வெளியீடு, SEBI (LODR) Regulations, 2015, விதி 33ன்படி பங்குச் சந்தைகளுக்கு அனுப்பியுள்ள தகவலின் சுருக்கமே ஆகும். இந்த காலாண்டு தணிக்கை செய்யப்படாத தனித்த மற்றும் கூட்டு நிதிநிலை முடிவுகளை பங்கு சந்தைகளின் (NSE/BSE) வலைதளங்களான www.nseindia.com மற்றும் www.bseindia.com மற்றும் நிறுவனத்தின் வலைதளமான www.kcpsugar.com ஆகிய வலைதளங்களில் காணலாம்.

இயக்குநர் குழுவின் ஆணைப்படி
sd/-
**கே.சி.பி. சுகர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டிற்காக**
**திருமதி. இர்ம்கார்ட் வெலகாபுடி**
நிர்வாக இயக்குநர்

இடம் : சென்னை.
தேதி : 06.11.2020